பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 25 வெள்ளிக்கிழமை 10.09.2021 கதிர் 309

இனி இது ரகசியம் அல்ல!

பொருளாதாரத்தில் நலிந்து கிடக்கும் அரசு தொடர்ந்து சீனாவின் உயர்ந்த வட்டியுடனான கடன் உதவித்திட்டத்தில் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்துள்ளது. அதனால் வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தின் காலில் விழுந்து பக்கம்02

## வவுனியாவில் நேற்று மட்டும் 8 பேர் கொரோனாவால் சாவு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று 08 மரணங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 08 பேர் நேற்று மரணமடைந்துள்ளனர். இவர்களில் 6 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இந்நிலையில், மரணித்த 8 பேரினதும் 10

## யாழில் நேற்றும் 6 பேர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சுழிபுரத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரும், சாவகச்சேரியைச் 10

# இத்துடன் கூட்டமைப்பு அழிந்தே விடும்; தமிழரசுக் கட்சியின் கதை முடிந்துவிடும்

## மாவை ஒரு விஷப்பாம்பு என்று சங்கரி போட்டுத்தாக்கு




இரா.சம்பந்தனுக்கும் செல்வம் அடைக்கலநாதனுக்கும் ஜெனிவா விடயத்தைக் கையாள்வதற்கான எந்த உரிமையும் கிடையாது. இத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்துவிடும்; இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கதை முடிந்துவிடும். மாவை சேனாதிராஜா ஒரு விஷப்பாம்பு. அவர் தலைமைப் பதவிக்காகவே அன்றிலிருந்து இன்றுவரை செயற்படுகின்றார்.

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். 2

## கூட்டமைப்பை உடைத்து தமிழரசுக் கட்சி ஒருபோதும் தனியாகச் செயற்படவில்லை



### அடித்துக் கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

ஜெனிவாக் கூட்டத்தொடர் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்த விதமான கடிதமும் அனுப்ப வில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதனுடைய தலைவர் சம்பந்தனின் கையொப்பத்துடன் கடிதம் அனுப்பப் பட்டது. தமிழரசுக் கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து ஒருபோதும் தனியாகச் செயற்படவில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் நேற்று 10

## வவுனியாவில் 149 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 149 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா 2

## 2,856 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 2 ஆயிரத்து 856 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று 10

## மேலும் 175 பேர் சாவு மொத்தக் காவு 10,864

இலங்கையில் மேலும் 175 பேர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 864 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 175 பேரில் 96 ஆண்களும், 79 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று 2

## அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்காக புதிய கட்டுப்பாடு

தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற அல்லது அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்காக நூறு வீதம் உத்தரவாத தொகையை இறக்குமதியாளர்கள் வைப்பிலிட வேண்டும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தில், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதிகபடியான இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி 10

## விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று இஸ்லாமிய தீவிரவாதத்துக்கும் முடிவுகட்டுக!



### கோட்டாபயவுக்கு ஞானசாரர் கடிதம்

தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று இஸ்லாமிய தீவிரவாதத்தையும் அழிக்க வேண்டும்.

– இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் 10

## துரையப்பா விளையாட்டரங்கில் சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டி

### யாழில் வைத்து அமைச்சர் நாமல் அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதன் உதவித் திட்டங்கள் மூலம் பொருளாதாரத்தை மீட்கும் தனது கடைசி எத்தனத்துக்கு அது தயாராகி வருகின்றது.

ஆனால், சர்வதேச நாணய நிதியமோ எதிர்பார்க்கப்பட்ட படி தனது நிபந்தனை விதிப்புச் சிக்கலை – தலையிடியை – ஆரம்பித்து விட்டது என்று தகவல்.

முதலில் சர்வதேச நாணய நிதியம் இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதானால் இலங்கை அரச நிர்வாகம், இராணுவ மயப்படுத்தலில் இருந்து உண்மையான சிவில் நிர்வாக முறைமைக்கு மாறவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அதாவது அரச உயர்மட்டத்தில், அமைச்சுக்களின் செயலாளர்களாகவும், அதிகார சபைகளின் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்ட முன்னாள் படை அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்புங்கள் என்ற நிபந்தனை. இதற்கு கோட்டா அரசு இணங்குமா என்பது கேள்விக்குறிதான்.

அடுத்து இப்போது புதிய நிபந்தனை ஒன்று வெளிக்கிளம்பியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னைய மஹிந்த அரசின் மத்திய வங்கி ஆளுநராக இருந்தவர் அஜித் நிவார்ட் கப்ரால். ராஜபக்ஷக்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர். இப்போதைய அரசில் அவருக்குத் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தோடு நிதி விவகாரங்களுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது. அதனால் அவர் அரசியல்வாதியாகி விட்டார். இப்போது அவரை மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்க அரசுத் தரப்பில் முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன.

இராஜாங்க அமைச்சர் பதவியும் எம்.பி. பதவியையும் இராஜினாமாச் செய்து விட்டு அவர் மீண்டும் மத்திய வங்கி ஆளுநர் பொறுப்பை ஏற்பார் என்று செய்திகள் வெளியாகின.

ஆனால் அந்த நியமனத்துக்கு சர்வதேச நாணய நிதியம் ஆப்படிப்பதாகக் கூறப்படுகின்றது. அரசியல் வாதி ஒருவர் சிவில் நிர்வாகத்தின் உயர் பதவிக்கு – மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு – நியமிக்கப்படுவது தவறானது, அதை நாணய நிதியம் எதிர்க்கும் என்று கொழும்பு அரசுக்கு உணர்த்தப்பட்டிருப்பதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடு பெறுவதானால் நாணய நிதியத்தின் விடயங்களைக் கையாள்வதில் நாட்டின் மத்திய வங்கி ஆளுநருக்கு முக்கிய பங்கு இருக்கும். அதனால்தான் ராஜபக்ஷக்கள் தங்களுக்கு மிக நம்பிக்கையானவரான கப்ராலை அந்தப் பதவிக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்கும் திட்டத்தில் கொழும்பு அரசுடன் சேர்ந்து செயலாற்றுவதற்குத் தான் இணங்கினால், நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநருடன் அதிகம் ஊடாட வேண்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டுள்ள நாணய நிதியம், அதனால் அப்பதவிக்கு நடுநிலையான – அரசியல் பக்கம் சாராத – தகுதியான – ஒருவர் வருவதையே விரும்புவதாகக் கூறப்படுகின்றது.

நாணய நிதியத்தின் இந்த அழுத்தத்தால் அஜித் நிவார்ட் கப்ராலை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கும் அரசின் முடிவு இப்போதைக்கு ஒத்திப்போடப்பட்டாலும் படலாம் என்கின்றன அரசு வட்டாரங்களுக்கு நெருக்கமான தரப்புகள்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசின் 'ஜிஞ்சர் குறூப்' ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குத் தனியான கடிதம் அனுப்பியது எனத் தெரிவித்து ஒன்பது பிரமுகர்களின் பெயர் குறிப்பிட்டு இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டமையும் –

அதில் பெயர் குறிப்பிடப்பட்ட பிரமுகர்களில் சிலர் தாம் அப்படிக் கடிதம் அனுப்பவில்லை என்று மறுத்தமையும் – தெரிந்தவையே.

மூலச் செய்தியை வெளியிட்ட இணையத் தளம் சம்பந்தப்பட்ட கடிதத்தின் பிரதியை வைத்திருக்கின்றது, அதனைத் துப்புவதா, விழுங்குவதா என்ற குழப்பத்தில் அது இருக்கின்றது என நேற்று இப்பத்தியில் எழுதியிருந்தேன். கடைசியில் அந்த ஊடகம் நேற்று அதனைக் கக்கி விட்டது. கடித மாதிரி வெளியே வந்து விட்டது.

கடிதம் அனுப்பவில்லை என்று பகிரங்கமாக மறுத்தவர்கள் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும். ஒவ்வொருவராகத் தெளிவுபடுத்துவார்கள் என்று நம்புவோமாக.

இலத்திரனியல் கையெழுத்து என்பதால், எப்போது வைத்தார்கள், என்ன பின்புலத்தில் வைத்தார்கள், இந்தக் கடிதத்துக்கு என வைக்கப்பட்ட கையொப்பமா என்ற கேள்விகள் – ஐயுறவுகள் – எழுப்பப்படலாம். அவை இலகுவாகப் புறம் ஒதுக்கத் தக்கவையல்ல.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உண்மையில் தாம் இந்தக் கடிதத்தில் ஒப்பம் வைக்கவேயில்லை. முன்னைய கடிதம் ஒன்றுக்கு அனுப்பிய இலத்திரனியல் ஒப்பத்தை இதில் பயன்படுத்தி விட்டார்கள் என்று மனம் புழுங்கினார் என அறிந்தேன். இருக்கலாம்.

*"கடிதம் தயார் பண்ணியமை உண்மைதான். ஆனால் அனுப்பும் முடிவு எடுக்கப்படவில்லை. நிலைமைகளை ஆராய்ந்து கடிதம் அனுப்புவதில்லை என்று எப்போதோ தீர்மானித்து விட்டோம். முதலில் தயாரிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி எல்லோருக்கும் அனுப்பப்பட்டது. அதையே நாங்கள் அனுப்பிய கடிதமாக இப்போது காட்டுகின்றார்கள்."* – என்று மனம் நொந்தார் ஒருவர்.

அதுவும் கூட உண்மையாக இருக்கலாம். அதனால்தான் இந்தச் செய்தி – தனி 'ஜிஞ்சர்' குறூப் ஒன்று கடிதம் அனுப்பியதான தகவல் – வெளியானதும் நெருப்பில்லாமல் புகையாது என்று குறிப்பிட்டேன்.

'கடிதம் அனுப்பப்பட்டது – அனுப்பப்படவில்லை'; 'தயாரிக்கப்பட்டது – அனுப்பப்படவில்லை'; 'ஒப்பம் பெறப்பட்டது – அனுப்பப்படவில்லை' – இப்படி பல கூற்றுக்கள் இருந்தாலும் இந்த நகர்வின் பிரதான சூத்திரதாரியான ஸ்ரீதரன் எம்.பியோ அல்லது சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியோதான் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும். ஸ்ரீதரன் எம்.பி. இன்று கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி விடயங்களைத் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் செய்தியாளர் மாநாடு கூட்டுவதா, இல்லையா என்பதில் அவர் குழப்பமாக இருக்கின்றார் என்று நேற்றிரவு சொல்லப்பட்டது.

இதற்கிடையில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும், அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் இன்று காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமை அலுவலகத்தில் இன்று இணைந்து செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டவிருக்கின்றனர். அங்கும் செய்தியாளர்கள் இந்த ஜிஞ்சர் குறூப்பின் நடவடிக்கை குறித்துப் பிய்த்து உதறுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கமும் கலந்து கொள்ளக் கூடும். இதேநேரம் யாழ்ப்பாணம் வந்திருக்கும் சாணக்கியன் எம்.பியும் தனியாக ஊடகவியலாளர்களைச் சந்திக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஜிஞ்சர் குறூப் தயாரித்த கடிதம், அதன் உள்ளடக்கம், அதன் பின்புலத்தில் கட்டவிழ்ந்த விடயங்களை அடுத்து வரும் நாள்களில் விரிவாகப் பார்க்கலாம்.

ஆனாலும் தயாரிக்கப்பட்ட கடிதத்தை அனுப்புவதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஒரு தரப்புக் கூற, அந்தக் குழுவுக்கு உள்ளேயே ஒரு தரப்பு மற்றையவர்களுக்குத் தெரியாமல் கடிதத்தை அனுப்பி ஆப்படித்ததும் அல்லாமல், அதனை ஓர் ஊடகத்துக்குக் கசிய விட்டுத் தங்களை கேவலப்படுத்தி, சட்டையை உரிய வைத்து விட்டது என்று குமுறுகின்றது பிரதான தரப்பு.

ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பும் பெயரில் சம்பந்தன் – சுமா – சாணக்கியன் குழுவுக்கு உள்கட்சிக்குள் ஆப்பு வைக்க முயன்றவர்கள் இப்போது தாங்கள் ஆப்பிழுத்த குரங்காகிப் போனமைதான் இதில் பெரும் துன்பியல் நிகழ்வு...!

– மின்னல் –

## இத்துடன் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் பயணிக்கக்கூடியதான நிலைப்பாட்டில் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாதக – பாதக நிலை என்ன? என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த வீ.ஆனந்த சங்கரி,

இதில் ஒரு நன்மை இருக்கின்றது. இத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்துவிடும்; இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கதை முடிந்துவிடும்.

ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் 18 பேர் நாடாளுமன்றில் இருந்தனர். தனது சுயநலனுக்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியை உடைத்தது மாவை சேனாதிராஜாவே. இதில் ஒரு வேடிக்கை என்னவெனில், அவரை இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் ஊடாக நானே நியமித்திருந்தேன்.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கு அரசு அறிவித்தல் விடுத்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்த மாவை சேனாதிராஜா, தேர்தல் கேட்பதெனில் கேட்கலாம் எனக் கொழும்பிலிருந்து தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், அப்போது அவர் தான் கேட்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

திருமதி யோகேஸ்வரன் கேட்பதற்குத் தயாராக உள்ளார். நீங்கள் கேட்காது விட சம்மதமா என அவரிடம் கேட்டபோது, சம்மதம் தெரிவித்தார். குறித்த தேர்தலுக்கான நோட்டீசுகளை அச்சடிப்பதற்கு சிவபாலன் சென்றபோது அவருடன் சென்ற மாவை சேனாதிராஜா குறித்த பிரதியில் குறிப்பிடப்பட்டிருந்த தலைவர் என்ற பதத்தை நீக்குமாறு கூறியிருந்தார்.

ஆரம்பத்திலேயே விஷப்பாம்பு போலவே அவர் எம்முடன் பழகியுள்ளார். ஆயினும், ஆனந்தசங்கரிதானே தலைவர் எனவும், அது அவ்வாறே இருக்கட்டும் எனவும் தெரிவித்து அச்சுப் பிரசுரத்துக்காக கையளித்துவிட்டு வந்தனர். ஆனால், மறுநாள் நோட்டிஸ் கிடைக்கும்போது அந்தப் பதம் நீக்கப்பட்டே இருந்தது. அதன்பின்னர் முகுந்தன் அதில் தலைவர் என்ற பதத்தைக் கையால் எழுதியிருந்தார். அவ்வாறானவர்தான் மாவை சேனாதிராஜா.

சிவசிதம்பரத்தின் மறைவுக்குப் பின்னர் தலைவர் பதவிக்கான தேர்வு இடம் பெற்றபோது அந்தத் தேர்வில் நானே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆனால், குறித்த கூட்டத்துக்கு மாவை சேனாதிராஜா மாத்திரமே சமுகமளித்திருக்கவில்லை. அவர் தலைமைப் பதவிக்காகவே அன்றிலிருந்து இன்றுவரை செயற்படுகின்றார். அமிர்தலிங்கம் செத்தால் என்ன, ஆனந்தசங்கரி செத்தால் என்ன. அவருக்கு வேண்டியது தலைமைப் பதவியே.

இன்று இருக்கின்ற பிரச்சினை என்னவெனில், பெரிய துரோகம் செய்தவர்கள் எல்லோரும் ஒன்றாக வந்தார்கள். இன்று அவர்கள் பிரிந்து உள்ளனர். செல்வம் அடைக்கலநாதன் யார்? தர்மலிங்கத்தின் மரணத்துக்குக் காரணம் செல்வம் அடைக்கலநாதன். ஆனால், தர்மலிங்கத்தின் மகனும், செல்வம் அடைக்கலநாதனும் கையெழுத்திடுகின்றனர் பதவிக்காக.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு முக்கிய காரணம் – இந்த நிலை இவ்வாறு தொடர்வதற்கு முக்கிய காரணம் இருவரேயாகும். எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி எனது நீண்டகால அனுபவத்தின்படி இந்திய முறைமையை ஒத்ததேயாகும். அதற்கு இன்று ஜனாதிபதி உள்ளிட்ட பலருடனும் பேசியிருக்கின்றேன்.

கடந்த காலத்தில் கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்களை இவர்கள் சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை. இறுதியில் 3 இலட்சம் மக்கள் இறந்ததுதான் மிச்சமானது. அந்த 3 இலட்சம் மக்கள் இறந்தமைக்குக் காரணமானவர்கள் இவர்கள்.

இன்று ஜெனிவா தொடர்பில் பேசுகின்றனர். முதன் முதலில் ஜெனிவா தொடர்பில் பேசும்போது, அங்கு சென்று என்னத்தைப் பேசுவது என்றார்கள். நாங்கள் போக வேண்டுமா எனவும், போகாவிட்டால் நாங்கள் துரோகிகளா எனவும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஜெனிவா போகாவிட்டால் நாங்கள் துரோகிகளா எனச் சிறிதரன் சொல்லியிருந்தார். அயல்நாடுகள் அங்கு போகவேண்டாம் எனக் கூறியதாக மாவை சேனாதிராஜா கூறியிருந்தார்.

சம்பந்தனுக்கும், செல்வம் அடைக்கலநாதனுக்கும் ஜெனிவா விடயத்தைக் கையாள்வதற்கான எந்த உரிமையும் கிடையாது. அது மாத்திரமல்ல கடமையும் கிடையாது. ஏனெனில், அவர்கள் இது வரை காலமும் செய்து வந்தது அவ்வாறான வேலையாகும் – என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 149 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மேலும் 175...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பெண் ஒருவர் 30 வயதுக்குட்பட்டவராவார். 19 ஆண்கள், 16 பெண்கள் என 35 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 139 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 77 ஆண்களும், 62 பெண்களும் அடங்குகின்றனர்.



# மட்டக்களப்பில் டெல்டா வைரஸ் தீவிரம் 49 மாதிரிகள் 43 பேருக்குத் தொற்று



மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்ட 49 மாதிரிகளில் 43 பேருக்கு டெல்டா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 88 வீதமானவர்களுக்கு டெல்டா திரிவுகள் இருக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம், குறித்த மாதிரிகளில் 4 பேருக்கு அல்பா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 193 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், நான்கு மரணங்களும் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்தார்.

எனவே, பொதுமக்களை சமூக பொறுப்புடன் செயற்படுமாறும் அனைவரையும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்த பணிப்பாளர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

## 290 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கடத்தல் தொடர்பில் 'பொப் மார்லி' கைதானர்

290 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பொப் மார்லி எல்பிட்டிய பகுதியில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தேசிய உளவுச் சேவையின் தகவலுக்கு அமைய, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவும் கடற்படையினரும் இணைந்து பேருவளைக்கு அப்பால் உள்ள ஆழ்கடலில் கடந்த மாத இறுதியில் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது படகொன்றிலிருந்து 288 கிலோ 644 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 290 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டதுடன், கடத்தலில் ஈடுபட்ட ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்.

அதன்படி தலாஹேன - மாலபே மற்றும் உடுமுல்ல - பத்தரமுல்லை ஆகிய முகவரிகளை கொண்ட 41 வயதான 'பொப் மார்லி' என அறியப்படும் களுத்துறை சமிந்த தாப்றூ என்பவரே இந்த விவகாரத்தில் உள்ள உள்நாட்டு பிரதான சந்தேக நபர் என பொலிஸ் தலைமையகம் கண்டறிந்தது.

குறித்த சந்தேக நபர் தலைமறைவாக உள்ள நிலையில் அவரைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன், பொது மக்களினது உதவியையும் நாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் சில விவசாயக் காணிகள் வனப் பகுதிகளாக அடையாளப்படுத்தல்



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு குளத்தின் நீரேந்து பகுதிகள் மற்றும் குளத்தின் கீழ் நீண்டகாலமாகப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்த விவசாயக் காணிகள் வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட் பிரமந்தனாறு குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள நடுத்தர குளங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது.

இந்தக் குளத்தின் மூலம் 602 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோக பயிர்ச்செய்கைளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் வனவளத் திணைக்களத்தால் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் குளத்தின் கீழான பொதுமக்களின் வயல் காணிகள், குளத்தின் வான் பகுதி என்பன வனப் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு எல்லைகள் இடப்பட்டுள்ளன.

## பிறந்து இருநாள்களான சிசுவுக்கு யாழ்ப்பாணத்தில் கொவிட் தொற்று

*யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிறந்து 2 நாள்களேயான சிசுவுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் கொரோனா தனிமைப்படுத்தல் விடுதியில் பராமரிக்கப்பட்டுவரும் குழந்தைக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*யாழ். போதனா வைத்தியசாலை கொரோனா ஆய்வு கூடத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குழந்தைக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.*

## 18 - 60 வயதுக்குட்பட்டவர்களுக்கு சினோபோர்ம் தடுப்பூசி பரிந்துரை

### இலங்கை மருத்துவ சங்கம்

18 முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசியை வழங்க இலங்கை மருத்துவ சங்கம் பரிந்துரைத்துள்ளது.

எந்த தீவிர நோய்களாலும் பாதிக்கப்படாதவர்களுக்கு செலுத்த சினோபோர்ம் தடுப்பூசி பயன்படுத்தப்படலாம் என அச்சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன கூறினார்.

இந்த வயது பிரிவில் இருப்பவர்களுக்கு தீவிர நோய்கள் இருந்தால், அவர்களின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பைஸர், மொடர்னா அல்லது அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பரிந்துரைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தற்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 30 முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பைஸர், மொடர்னா, அல்லது அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசிகளை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 ஆவது மருந்தாக வழங்க பரிந்துரைத்தது.

இதேவேளை மத்திய கிழக்கில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் சினோபோர்ம் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு குறைவான செயற்திறன் அளிப்பது கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் கூறியுள்ளது.

## 2 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு

### ஒருவர் கைது

*சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.*

*தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய வகையில் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனைக்கு உட்படுத்திய போதே குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*வத்தளை - வனவாசல வீதி - ஜயந்தி விகாரைக்கு முன்பதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது அந்த வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்டுள்ளனர்.*

*இந்நிலையில் ஒரு கிலோ 666 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கொழும்பு - 14 கிராண்பாஸ் பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

## கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 60 வீதத்தினருக்கு செலுத்தப்பட்டுள்ளது

கொழும்பு, செப். 10

இலங்கையில் 60 சதவீதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ள தாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 40 சதவீதமானோருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு உள்ளிட்ட 4 மாவட்டங்களில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் கடந்த 6ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசின் அபத்த நியமனம்

**இலங்கையின் ஆட்சிப் பீடக் கூத்து தொடர் கதையாகவே நீடிக்கின்றது. இது எங்கு போய் முடியும் என்பதுதான் கேள்வி.**

**ஒரு புறம் முன்னாள் படையினரை சிவில் அதிகாரிகளாக நியமித்து சிவில் சேவையையே இராணுவ மயப்படுத்துகின்றது கோட்டாபய அரசு.**

**இப்போது உயர் சிவில் அதிகாரிகளின் பதவிகளுக்கு அரசியல்வாதிகளை நியமிக்கும் கைங்கரியமும் அரங்கேறத் தொடங்குகின்றது.**

**முன்னாள் படை அதிகாரியாகவோ அல்லது சிவில் அதிகாரியாகவோ இருந்த ஒருவர் அரசியலுக்கு வருவதும், தேர்தலில் மக்களினால் அங்கீகரிக்கப்பட்டு அரசியல் பதவிக்கு தெரிவாவதும் வேறு.**

**ஆனால் அரசியல் பதவிகளில் இருப்போரை சிவில் வேலையின் உயர் பதவிகளுக்கு நியமிப்பது வேறு.**

**இந்த இரண்டாவது வகை, கேலிக் கூத்தான விடயமாகும். ஆனால் அதையும் கோட்டாபய அரசு செய்கின்றது.**

**அரசுத் தரப்பின் எம்.பி. ஒருவரை – இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ராலை – மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கும் கோட்டா அரசின் முடிவு இத்தகைய குளறுபடித்தனத்தின் உச்சமாகும்.**

**சட்டப்படி சாவலுக்கு உட்படுத்த முடியாத நியமனமாக இது இருக்கக் கூடும். ஆனால் அரச நிர்வாகத்துக்கான தார்மீகங்களின்படி இது மிகப்பெரும் அபத்த வேலையாகும்.**

**அரசின் உயர் சிவில் நிர்வாகப் பதவிகளுக்கு முன்னாள் படையினரை நியமிப்பது அரசை இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கை என்று கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது.**

**ஆனால், கோட்டா அரசோ, அவர்கள் – அந்த முன்னாள் படை அதிகாரிகள் – படை சேவையிலிருந்து ஓய்வு பெற்றமையுடன் சிவிலியன்களாகி விடுகின்றனர். அந்த நியமனங்களை படை அதிகாரிகளின் பதவிகளாகக் கருதக் கூடாது என்று சப்புக்கட்டு விளக்கம் தருகின்றது.**

**இங்கு படையினர் மனவமைப்புத்தான் முக்கியமானது. அந்த அதிகாரியின் பண்பியல்பு, அணுகு முறை, அரசுக்குள் அவருக்கு இருக்கும் முக்கியத்துவம் யாவையும் படை அதிகாரி என்ற நிலைப்பாட்டின் வெளிப்பாடாகவே அமையும். அது மாத்திரமல்ல, படையில் அவர் பெற்ற பதவி நிலையுடன்தான் – 'பிரிகேடியர்' என்றோ, 'ஜெனரல்' என்றோ, 'அட்மிரல்' என்றோ பெயர் சுட்டித்தான் – அந்தப் பதவியில் பணியில் தொடர்வார்.**

**ஆட்சிப்பீடத்தில் இராணுவ மயப்படுத்தல் என்பது வெறுமனே காணிகளை, கட்டடங்களை, இராணுவம் ஆக்கிரமிப்பது மட்டுமல்ல, படை அதிகாரிகளும் ஓய்வு பெற்ற படை அதிகாரிகளும் சிவில் நிர்வாகிகளின் பதவிகளில் அமர்வது மட்டுமல்ல, அதையும் தாண்டி இராணுவ மூளை மையத்துடன் அரச நிர்வாகத்தை நடத்த முற்படுத்துவதையும் கூட உள்ளடக்கும். ஆட்சிப்பீடத்தின் – ஆட்சி நிர்வாகத்தின் – மனவமைப்பு** (Mindset) **படைச் சிந்தனைப் பாணிக்குத் தடம் புரள்வதையும் இது குறிக்கும்.**

**அது போன்றதுதான் அரசியல்வாதிகளை சிவில் அதிகாரிகளுக்குரிய பதவியில் அமர்த்துவதும்.**

**நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநராகவோ அல்லது நாட்டின் நாணய சபையில் ஓர் உறுப்பினராகவோ வர முடியாது என நாட்டின் நாணய நிதியச்சட்டம் தெளிவாகத் தெரிவிக்கின்றது. அதற்காக அமைச்சராக இருக்கும் அரசியல்வாதி ஒருவர் தமது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்து விட்டால் மத்திய வங்கி ஆளுநராக வரலாம் என் இந்தச் சட்டத்துக்கு வியாக்கியானம் செய்வது பெரும் அபத்தமாகும்.**

**ஆனால் அபத்தங்களைச் செய்வதைத்தான் தனது சாதனையாகக் காட்டும் இந்த அரசிடம் நாம் சுட்டிக்காட்டும் இந்த விடயம் – நியாயம், செல்லாது – எடுபடாது – என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.**

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மீளாய்வு செய்யப்படவேண்டும்

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் தரத்திற்கு ஏற்ப கொண்டுவர மீளாய்வு செய்ய ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

மேலும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை தடுத்து வைத்திருக்கின்றமை குறித்தும் விசேட அறிக்கையாளர் மேரி லாலர் உட்பட ஏழு ஐ.நா. அறிக்கையாளர்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிகரித்து வரும் வெறுப்பு பேச்சு, வன்முறை மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக மனித உரிமை வழக்குகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் ஒரு முயற்சியாக இந்தக் கைது இருக்கலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை, விசாரணை இன்றி நீண்ட நாள் தடுத்து வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் விசேட அறிக்கையாளர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையாளர், கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பது தொடர்பாக விசேட அறிக்கையாளர், சிறுபான்மையினர் பிரச்சினைகள் பற்றிய விசேட அறிக்கையாளர் உட்பட ஏழு ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

## நல்லிணக்க முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு

### வழங்கும் அமெரிக்கா



இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை அமெரிக்க வழங்கும் என பதவியில் இருந்து விலகவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கூறியுள்ளார்.

மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானது என குறிப்பிட்ட அவர், அனைவரும் மனித உரிமைகளை மதித்து செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

ஜனநாயக அரசாங்கமொன்று அந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என்பதால் கடந்த கால மற்றும் நிகழ் காலத்தில் உள்ள மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு அதற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நல்லிணக்க முயற்சிகள், நிலைபேறுகால நீதிப் பொறிமுறையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அலைனா டெப்லிட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கக்கூடிய கொள்கைகளை வகுப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் முனைப்புக் காட்ட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## 23 லட்சம் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள ஒக்ஸிமீற்றர்கள் கடத்தல் முறியடிக்கப்பட்டது

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 23 லட்சம் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள 4 ஆயிரத்து 200 ஒக்ஸிமீற்றர்களைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியை இலங்கை சுங்க அதிகாரிகள் முறியடித்துள்ளனர்.

ஒரு துப்புரவு முகவராகத் தன்னை அடையாளப் படுத்திக்கொண்டு குறித்த நபர் அதிகாரிகளுக்கு போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஒக்ஸிமீற்றர்களை ஏற்றுமதி செய்ய முற்பட்டுள்ளார்.

தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு அல்லது இலங்கை சுங்கத்துக்குப் பொருந்தும் வரிகளைச் செலுத்தாமல் குறித்த பொருள்களைக் கொண்டு செல்வதை அறிந்த சுங்க தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் அதனை இடைமறித்தனர்.

இதன்போது 23 லட்சத்து 44 ஆயிரத்து 642 ரூபா பெறுமதியான 21 பெட்டிகளில் நிரம்பிய 4 ஆயிரத்து 200 ஒக்ஸிமீற்றர்களின் இருப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து சந்தேகநபர் கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் செப்டெம்பர் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவில் உள்ள இலங்கை சுங்க தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒற்றுமை பற்றி உரைக்கும் போலித் தேசியவாதிகள் அவர்களுக்குள் ஒற்றுமையின்றி செயற்படுகின்றனர்

### தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பிள்ளையான் சாட்டை

ஒற்றுமை பற்றி கருத்துரைத்துவிட்டு தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் செயற்படுவதே போலித் தமிழ்த் தேசியவாதிகளின் செயற்பாடு என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு நிவாரண விலையில் சதொச ஊடாக அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக சதொச விற்பனை நிலையம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கள்ளியங்காடு உணவுக் களஞ்சியசாலையில் இந்த சதொச விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் ஐ.நா. சபைக்கு நான்கு பகுதிகளில் இருந்து கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் கடிதத்தை எழுதியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.




- கலாநிதி.க.கஜவிந்தன் -
(சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்,
மெய்யியல் - உளவியல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

> நம் செயற்பாடுகள் எவ்வளவு பெரியவையாக இருந்தாலும், சிறியவையாக இருந்தாலும், தற்கொலை எண்ணத்துடன் போராடுபவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கலாம்.

# சமூகத்தில் அதிகரிக்கும் தற்கொலைகளும் குறைப்பதற்கான சில தடுப்பு முறைகளும்

ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 10 அன்று அனுசரிக்கப்படும் உலக தற்கொலை தடுப்பு தினமானது தற்கொலைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தற்கொலைகள் மற்றும் தற்கொலை முயற்சிகளின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்துடன் தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் ஒரு வழியாக அமைகின்றது.

உலக தற்கொலை தடுப்பு அமைப்பு இந்த வருடம் செப்டெம்பர் 10 உலக தற்கொலை தடுப்பு தின கருப்பொருளாக 'செயற்பாடு மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்' (Creating Hope Through Action) என்பதை பரிந்துரைத்துள்ளது. இதன் பொருள் தற்கொலைக்கு பதிலாக ஒரு மாற்றுவழி இருக்கிறது என்பதையும், அதனால் நம் அனைவரிடமும் நம்பிக்கையையும் தெளிவையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டதுமாகும்.

நம் செயற்பாடுகள்எவ்வளவு பெரியவையாக இருந்தாலும், சிறியவையாக இருந்தாலும், தற்கொலை எண்ணத்துடன் போராடுபவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கலாம். தற்கொலையைத் தடுப்பது பெரும்பாலும் சாத்தியமாகும், அதைத் தடுப்பதில் எம் ஒவ்வொருவருக்கும் முக்கிய பங்கு உள்ளது. எம் செயலின் மூலம், ஒருவரின் இருண்ட தருணங்களில் - சமூகத்தின் அங்கமாக, பெற்றோராக, நண்பராக, சக ஊழியராக அல்லது அயல்வீட்டாராக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாம். தற்கொலை நெருக்கடியை அனுபவிப்பவர்கள் அல்லது தற்கொலையால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரிப்பதில் நாம் அனைவரும் பங்கு வகிக்கலாம் என்ற கருத்துக்களை இவ்வருடத்திற்கான தொனிப்பொருள் வலியுறுத்துவதாக அமைகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி ஒவ்வொரு வருடமும் சுமார் பத்து லட்சம் மக்கள் தற்கொலையால் இறக்கின்றனர். பொதுவாக நம்மில் பலரிடம் எழும்பும் வினாக்களாக, தனிநபர்கள் தங்கள் உயிரை அழித்துக் கொள்ள எது தூண்டுகிறது? மன அழுத்தம் மற்றும் விரக்தியின் பிடியில் உள்ளவர்களும் இல்லாதவர்களும் தங்களை மாய்த்துக்கொள்ள காரணமாக அமைவது எது என்பதாகும். இதனைப் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக உள்ளது. தற்கொலை என்பது தாங்கமுடியாத துன்பத்திலிருந்து தப்பிக்க தனியன் எடுக்கின்ற ஒரு தீவிர முயற்சியா



கும். சுய வெறுப்பு, நம்பிக்கையின்மை மற்றும் தனிமை உணர்வுகளால் கண்மூடித்தனமாக, மரணத்தைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என தற்கொலைக்கு தூண்டப்படுகின்றனர். இதற்கு அவர்களின் சிந்தனை வட்டம் குறுகிக் காணப்படுவதே காரணமாக உள்ளது. பலரிடம் கவலையைப் போக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தபோதிலும், பெரும்பாலானவர்கள் தற்கொலை எண்ணமுள்ளதால் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளனர். தற்கொலையைத் தவிர்ந்து வாழ்தலுக்கு எத்தனையோ மாற்று வழிகள் இருக்கின்றன என்பதை அவர்கள்



சிந்தித்தாலும் அவர்களால் மாற்று வழி ஒன்றைப் பார்க்க முடிவதில்லை.

உலக சுகாதார நிறுவன ஆய்வின்படி

* உலகம் முழுவதும் ஆண்டுக்கு கிட்டத்தட்ட எட்டு லட்சம் மக்கள் தற்கொலை செய்கின்றனர்.
* ஒவ்வொரு தற்கொலையும் வேறு பலரிடம் தற்கொலை முயற்சியை ஊக்குவிக்கிறது. ஒரு தற்கொலை முயற்சி மக்களின் தற்கொலைக்கான மிக முக்கியமான ஆபத்துக் காரணியாகும்.
* உலகளாவிய ரீதியில் 15 - 19 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்திற்கு நான்காவது முக்கிய காரணம் தற்கொலை.
* உலகளாவிய தற்கொலைகளில் 77 வீதம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றன.
* விசம் அருந்துதல், தூக்குப்போடுதல் மற்றும் துப்பாக்கிகளை உபயோகித்தல், தொடரூந்தை பயன்படுத்துதல் போன்றன உலகளவில் தற்கொலைக்கான பொதுவான வழிகளாகப் பின்பற்றப்படுகின்றன.

தற்கொலை என்பது அதிக வருமானம், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் மட்டுமல்ல, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நிகழ்கிறது. ஒவ்வொருவரின் தற்கொலையும் குடும்பங்கள், சமூகங்கள் மீது நீண்ட காலப் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. தற்கொலை ஒரு தீவிர பொது சுகாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. சரியான நேரத்தில், முறையான தலையீடுகளால் அதிகமான தற்கொலைகள் தடுக்கப்படுகின்றன. இருப்பினும் இன்னும் விரிவான தற்கொலை தடுப்பு உத்திகள் அவசியம் தேவைபாடுடையனவாக உள்ளன.

### தற்கொலைக்கான அறிகுறிகள்

* தற்கொலையைப் பற்றி பேசுவது - தற்கொலை, இறத்தல் அல்லது சுய - தீங்கு பற்றிய பேச்சும், 'நான் பிறந்ததே பாவம் என்று நினைக்கிறேன்', 'நான் உன்னை மீண்டும் பார்ப்பேனோ தெரியாது …' மற்றும் 'நான் இறந்துவிடுவது நல்லது…' போன்ற பேச்சு வெளிப்பாடுகள்.
* அபாயகரமான வழியைத் தேடுவது - தற்கொலை முயற்சியில் பயன்படுத்தக்கூடிய நச்சுத் திரவங்கள், மாத்திரைகள், கத்திகள் அல்லது தீங்கு தரும் பிற பொருள்களை அணுகுவது.
* மரணத்தில் ஈடுபாடு - மரணம், இறப்பு அல்லது வன்முறையில் ஈடுபாடு. மரணம் பற்றிய கவிதைகள் அல்லது சோகக் கதைகளை எழுதுதல்.
* எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லை - உதவியற்ற தன்மை, நம்பிக்கையின்மை மற்றும் சிக்கிக்கொண்ட உணர்வுகள். வாழ்க்கை ஒருபோதும் சந்தோசமாக அமையாது அல்லது மாறாது என்ற தீவிர நம்பிக்கையை வெளிப்படுத்துதல்.
* சுய வெறுப்பு - பயனற்ற உணர்வு, குற்ற உணர்வு, அவமானம் மற்றும் சுய வெறுப்பு. ஒரு சுமையாக உணர்கிறேன் ('நான் இல்லாமல் எல்லோரும் நன்றாக இருப்பார்கள்).
* நடத்தை மாற்றங்கள் - ஏனையோர் மீது திடீரென விருப்பத்தைக் காட்டல். மதிப்புமிக்க உடைமைகளை வழங்குதல். குடும்ப உறுப்பினர்களுக்கான தேவைப்பாடுகளை செய்தல். பலகாலமாக கோபமுள்ளவர்களுடன் கதைத்தல்.
* விடைபெறுதல் - அசாதாரண அல்லது எதிர்பாராத வருகைகள் அல்லது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அழைப்புகள். மீண்டும் பார்க்க முடியாது என்பது போல் மறைமுகப் பேச்சு மற்றும் செயற்பாடுகள்.
* விலகியிருத்தல் - நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து விலகியிருத்தல். தனிமை அதிகரிக்கும். தனியாக இருப்பதற்கு விரும்புதல்.
* சுய அழிவு நடத்தை - அதிகரித்த மது அல்லது போதைப்பொருள் பயன்பாடு, பொறுப்பற்ற வாகனம் ஓட்டுதல், பாதுகாப்பற்ற உடலுறவு. தேவையற்ற அபாயங்களை எதிர்கொள்வது.
* திடீர் அமைதி மற்றும் மிகையுணர்வு - மிகுந்த மன உளைச்சலுக்குப் பிறகு திடீரென அமைதியும் மகிழ்ச்சியும் உணர்வது.

(08ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் - 71

ந.வித்தியாதரன்

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி சுமார் ஐம்பது ஆண்டு காலம் தமிழ் ஊடகத்துறையில் கோலோச்சிய எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுடன் அத்துறை தொடர்பில் நெருங்கிய ஊடாட்டம் எனக்கு ஐந்து வருடங்கள் மட்டுமே கிடைத்தன. என் ஐந்து வருட அனுபவத்தின் மூலம் அந்த ஜாம்பவானின் திறமையை நீங்கள் எடை போட்டு விட முடியாது. சிவநாயகம் ஐயா தம்மைப் பற்றி - தன் அனுபவங்கள் குறித்து - எடுத்துரைத்தவை ரொம்பக் குறைவு. எனினும் பணி ஓய்வின் பின்னர் ஓரிரு சந்தர்ப்பங்களில் அவர் வாய் திறந்து இருக்கின்றார்.

1994இல் அவர் இலங்கை வானொலியில் ‘எமது அதிதி’ என்ற நிகழ்ச்சியில் பங்கு பற்றி சில கருத்துக்களைச் சொன்னார். அதனை அவரோடு தினபதி - சிந்தாமணியில் பணியாற்றிய - அண்மையில் காலமான - நமது நண்பர் ஷண் தொகுத்திருந்தார்.

சிவநாயகம் ஐயா தம்மைப் பற்றி தமது வாயால் கூறிய கருத்துக்கள் இந்த தொடருக்கு முக்கியமல்லவா?

அதனை அப்படியே இன்றும் நாளையும் வாசகர்களுக்கு படைக்கிறேன்.

*******

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையுலகை பொறுத்த வரையில் “ஜாம்பவான்” என்று சொன்னால் அது எஸ்.டி.சிவநாயகத்தைத் தான் குறிக்கும் என்பது எல்லோரும் அறிந்ததே.

வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, சூடாமணி பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றிப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைச் சம்பாதித்துக் கொண்ட இவர் உருவாக்கிய ஊடகவியலாளர்கள் இன்று இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்திருக்கிறார்கள் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை .

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி துறைகளில் எல்லாம் இவர் புகழ்பாடும் மாணவர்கள்தான் பணியாற்றி வருகிறார்கள் என்பதையே அன்றைய (2000 ஏப்ரல்) இவரது இறுதி யாத்திரையின்போது காண முடிந்தது.

எழுத்தாளர்களிலேயே சுய விளம்பரத்தை விரும்பாத வித்தியாசமான, துணிச்சலான ஆசிரியர் இவர்.

‘சுதந்திர’னிலே குயுக்தியாராகவும், “சிந்தாமணி’,



சிவநாயகம் ஐயாவை இலங்கை வானொலியில் பேட்டி கண்ட புவனலோஜினி

“சூடாமணி”யிலே திரிஞானியாராகவும் இவர் தந்த பதில்கள் பலரது பாராட்டையும் பெற்றன.

அரசியல் கட்டுரைகள், தொடர் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மட்டுமல்லாது தினபதியின் அத்தாணி மண்டபத்திலே அரசகேசரியாக அமர்ந்துகொண்டு சொல்லாட்சி நடத்தியவர். சிந்தாமணியில் முகவரியின்றி இவர் எழுதிய முகப்புப் படக் கவிதைகள் ஒவ்வொன்றும் முத்துக்கள். இவரது இழப்பு இலங்கை பத்திரிகையுலகில் ஈடுசெய்ய முடியாதது.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் (1994 இல்) இலங்கை வானொலியில் ஒலிபரப்பான ‘எமது அதிதி’ நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அருமையான கருத்துக்களை வழங்கினார் எஸ்.டி.சிவநாயகம். அந்தப்



பேட்டியை அன்று கேட்டவர்களும், இன்று கேட்காதவர்களும் படிப்பதற்காக இங்கே தொகுத்து தருகிறோம். பேட்டி கண்டவர் புவனலோஜினி. கடந்த வாரம் காலமான சிவநாயகத்துக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமையும் இப் பேட்டி இலங்கை வானொலியில் மறு ஒலி பரப்பானது குறிப்பிடத்தக்கது.

இதோ அந்தப் பேட்டி. இதுவே அவரது முதலும் கடைசியுமான பேட்டியாகும்.

அதன் விவரம் வருமாறு:-

“நான் சிறுவனாக - மாணவனாக - இருந்த பொழுது இந்தியாவிலிருந்து இரண்டு வாரப் பத்திரிகைகளைத் தருவித்தார் என் தந்தை.

ஒன்று ‘லோபோபகாரி’ - பரலி நெல்லையப்பர் என்பவரால் வெளியிடப்பட்ட பத்திரிகை. இன்னொன்று “நவசக்தி” - திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் அவர்களால் வெளியிடப்பட்ட பத்திரிகை.

இந்த இரண்டு பத்திரிகைகளும் வீட்டுக்கு வந்தால் என் தந்தையார் மிகுந்த அக்கறையோடு படிப்பார். என்னையும் அவற்றைப் படிக்கும்படி சொல்லுவார். கல்யாண சுந்தர முதலியாருடைய தமிழைப் படிப்பது அப்போது எனக்குச் சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. என்றாலும் கட்டாயம் படிக்க வேண்டும் என்று வற்புறுத்திப் படிக்கச் செய்தார் அப்பா.

“பார் எவ்வளவு அழகாகத் தமிழ் எழுதுகிறார் கல்யாணசுந்தர முதலியார்” என்று அவருடைய தமிழை வியந்து விதந்து பாராட்டுவார் என் தந்தை.

அப்பொழுதுதான் இந்தப் பத்திரிகைகளிலே எனக்கொரு நாட்டமும் கவர்ச்சியும் ஏற்பட்டன.

என் தந்தையாரைச் சந்திக்க வருகின்றவர்கள் எல்லோரும் அந்தப் பத்திரிகைகளை இரவல் வாங்கிச் செல்வார்கள்.

அந்தப் பத்திரிகைகளில் வெளிவந்த இந்தியச் செய்திகளை எல்லாம் விமர்சிப்பார்கள். அப்பொழுதுதான் எனக்கும் ஓர் எண்ணம் ஏற்பட்டது. “இந்தப் பத்திரிகை என்பது ஒரு கவர்ச்சிப் பொருள். இதிலே நானும் ஈடுபட்டால் என்ன? ஒரு காலத்தில் இப்படியொரு பத்திரிகையை வெளியிட்டால் என்ன?” என்ற எண்ணம் எனக்கு அப்போது உருவாகி விட்டது.

பின்னர் நான் கல்லூரியில் படிக்கின்ற பொழுது பத்திரிகையொன்று கல்லூரியில் நடத்த வேண்டுமென்று தெரிவித்தார்கள்.

அப்பொழுது யார் அதற்கு ஆசிரியராக வருவது என்று கேட்ட பொழுது முண்டியடித்துக் கொண்டு “நானே வருகிறேன்” என்று தெரிவித்து, அந்தப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்தேன். அப்பொழுது எனக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயது இருக்கலாம். பத்திரிகை ஒன்றும் அவ்வளவு பிரமாதமாக இல்லாவிட்டாலும் என்னுடைய பத்திரிகை வாழ்க்கை அப்படித்தான் ஆரம்பித்தது.

அன்றிலிருந்து படிப்படியாக ஏதாவதொரு நல்ல பத்திரிகையில், உயர்தரமான பத்திரிகையில், ஜனரஞ்சகமான பத்திரிகையில், ஆசிரியராக வரவேண்டும் என்ற எண்ணம் என் மனதிலே அப்பொழுதே வேரூன்றி விட்டது. பின்னர் நான் அரசாங்க உத்தியோகஸ்தனானேன்.

அதன் பிறகு கூட்டுறவுத் துறையிலே ஓர் உயர்ந்த பதவியைப் பெற்றுப் பணி புரிகின்ற பொழுது அங்கு கூட்டுறவு சார்பாக ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென்று யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பத்திரிகையை வெளியிட்டார்கள். ‘ஐக்கிய தீபம்’ என்பது அப்பத்திரிகையின் பெயர்.

அந்தப் பத்திரிகைக்கு யாரை ஆசிரியராகப் போடலாம் என்று அவர்கள் யோசித்த பொழுது என்னுடைய அதிஷ்டமோ அல்லது என்னுடைய எதிர்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அப்போதே ஒரு நியதி இருந்ததோ தெரியாது.

என்னையே “ஐக்கிய தீபத்துக்கு” ஆசிரியராக நியமித்தார்கள். அதிலிருந்து நான் படிப்படியாக தினகரன், வீரகேசரி மற்றும் எத்தனையோ பத்திரிகைகளுக்கெல்லாம் ஆசிரியரானேன். இதற்கிடையில் கூட்டுறவுத் துறையிலிருந்து வெளியேறியவுடனேயே ஒரு பத்திரிகையை நான் நடத்தினேன். அந்த பத்திரிகையின் பெயர் “உதயம்.”

சுமார் ஆறேழு இதழ்கள் வரை வெளி வந்த “உதயம்” பின்பு வெளிவரவில்லை. அது நிறுத்தப்பட்டவுடனே எனக்குத் “தினகர”னிலே வேலை கிடைத்தது.

எனக்குப் பிடித்தமான தமிழ் எழுத்தாளர்களிலே முதலில் எனது உள்ளத்தில் பதிந்தவர் வி.கல்யாண சுந்தர முதலியார்தான். அவர் எழுதிய “முருகன் அல்லது அழகு” என்ற புத்தகத்தை நான் பத்துப் பன்னிரண்டு



பேட்டியைத் தொகுத்த சிரேஷ்ட பத்திரிகையாளர் ஷண்.

தடவைகள் படித்திருப்பேன்.

அது எனது மனதிலே ஓர் அத்திவாரமாக அமைந்தது. அதன் பின்னர் என்னைக் கவர்ந்த எழுத்தாளர் சுத்தானந்த பாரதியார்.

அவருடைய நூல்கள் எல்லாவற்றையும் மனனம் செய்யுமளவுக்கு நான் படித்திருக்கிறேன்.

அதன் பின்னர் என் மனதைக் கவர்ந்தவர் ‘கல்கி’ ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி. அவர் என்னோடு மிகவும் நெருங்கிய நண்பர் போலப் பழகினார். அவர் எழுதிய “இலங்கைச் சுற்றுப் பிரயாணம்” பற்றிய கட்டுரையில் என்னைப் பற்றி மிகவும் விதந்து எழுதியிருக்கிறார். அவர் என் மனதைக் கவர்ந்த ஆசிரியராக இருந்தார்.

கல்யாணசுந்தர முதலியார், சுத்தானந்த பாரதியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி மூவரும்தான் ஒரு வகையில் எனக்கு எழுத்துத் துறையில் குரு என்று சொல்லலாம்.

என் மனதைக் கவர்ந்தவர்கள் மூவர். அதிலே முதலாவது கல்கி அவர்களைச் சொல்லலாம். இரண்டாவது கண்ணதாசனுடைய வசன நடையைச் சொல்ல லாம். மூன்றாவது தமிழ்வாணனுடைய வசனநடை யைச் சொல்லலாம். இந்த மூன்று பேரையும் நான் மிகவும் மதிக்கிறேன்.

ஏன் இவர்களை மதிக்கிறேன் என்று ஒரு கேள்வியை நீங்கள் கேட்டால் அதற்கு நான் விளக்கம் சொல்வதற்கு மிக நேரம் எடுக்குமாகையால் அடுத்த கேள்விக்கு வருவோம்.

(08ஆம் பக்கம் பார்க்க)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 126



**348. விடுதலைப் புலிகளின் அறிவிப்புகள் எப்படியிருந்தன?**

அவர்கள் – முக்கியமாக கே.பி. – சில காலங்களுக்கு அவரது இறப்பை ஊர்ஜிதம் செய்யவில்லை. அவர் உயிருடன் இருக்கிறார் என்றே செய்திகள் தந்து கொண்டிருந்தார். அவருக்கு ஆதரவாக இல்லாத விடுதலைப் புலிகளின் ஊடகத் தளங்களில் அவரும் அவருடன் இருந்த 800 இற்கும் மேற்பட்ட போராளிகள் கடைசி வரைக்கும் போராடியோ அல்லது சயனைட் எடுத்தோ வீரமரணம் அடைந்தார்கள் என செய்தி வெளியிட்டார்கள். பிரபாகரனும், காயப்பட, சயனைட் அருந்தி வீரமரணம் எய்தினார் என்று அறிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் இன்னுமொரு தரப்பினர் பிரபாகரனையும் குடும்பத்தையும் போர் வலயத்துக்கு வெளியால் அப்புறப்படுத்தி, அவர்களை நந்திக்கடலுக்கு அனுப்பி, கடலுக்குக் கொண்டு சென்று, ஒழுங்கு செய்த கப்பல் ஒன்றில் வெளிநாடு செல்லதான் கே.பி. திட்டம் போட்டிருந்தார். அது கே.பிக்கு ஆயுதங்கள் எடுத்துச் செல்ல அனுசரணையாக இருந்தவர்களின் கப்பல், ஆனால் குழப்பங்களுக்காக, மக்களை அப்புறப்படுத்துவதற்கு அமெரிக்க, பிரித்தானிய, பிரான்ஸ் கப்பல்கள் வருகின்றன எனச் சொல்லப்பட்டது, ஆனால் திட்டம் சரிவரவில்லை என விளக்கப்பட்டது.

இதனை மேலும் சிலர், கே.பி. தனது தொடர்புகளால் இராணுவத்தினரிடம் கப்பம் பேசி, பிரபாகரன் போர் வலயத்தை விட்டு வண்டி ஒன்றில் வெளியேற அதனைப் பிரச்சினையில்லாமல் வெளியேவிட்டு, நந்திக் கடலிலிருந்து கப்பலுக்குப் போக உதவி செய்வதாகப் பேரம் பேசி ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் இராணுவத்தினர் கடைசி நேரத்தில் கழுத்தறுத்து விட்டனர் என்றனர்.

அதனை இன்னொரு விதத்தில் கே.பியின் அவநம்பிக்கை கொண்டவர்கள் அவரையே முடிவுகளுக்குக் குற்றம் சொன்னார்கள்.

**349. கே.பியின் மேல் அவநம்பிக்கைகள் இருக்கின்றனவா?**

விடுதலைப் புலிகளின் சில பகுதிகளாலேயே அவை எழுதப்பட்டன, வளர்க்கப்பட்டன. நடந்தவை, சில



அனுமானங்களில் தர்க்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. சூழ்நிலைச் சான்றுகளையே, ஆதாரமாக அவர்கள் முன்வைக்கிறார்கள். போர் இருந்த நிலையில் கே.பி. முல்லைத்தீவுக்கு கப்பலைக் கொண்டு வரக் கூடியதாகச் சிந்தித்திருப்பார் என்றோ, பிரபாகரன் தப்புவதற்கு உதவி செய்ய இராணுவத்தினர் பொருந்தியிருப்பார்கள் என்பதையோ அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அடுத்து முக்கியமாக, பிரபாகரன் இறப்பதற்கு முன்பே போராட்ட வழிகள் மாறவேண்டும் எனவும், பயணித்த பாதைகளில் மாற்றங்கள் தேவையென்றும், புலம்பெயர் அமைப்பு ஒன்று முக்கியத்துவம் பெற வேண்டும் எனவும், அதற்கு வடிவமைத்தலால் அவர் பிரபாகரன் போர் வலயத்திலிருந்து மீளச் சந்தர்ப்பம் இல்லை எனக் கணித்தார் – என்று கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

பின்னர் அவர் முன்மொழிந்து தொடங்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசு அவர் முன்னரேயே திட்டமிட்டது என்றும் கருதப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக கே.பி. ஸ்ரீலங்கா புலனாய்வாளரால் பிடிக்கப்பட்டாரா அல்லது அப்படியான ஒரு நாடகத்தில் ஒரு புரிந்துணர்வில் அவர்களுடன் சேர்ந்து சென்றாரா என்பதை ஒட்டி வைக்கப்படும் கருத்துகள்.

கே.பி. மலேசியாவின் கோலாலம்பூர் ரியூன் **(TUNE)** என்ற ஹோட்டலில் ஓகஸ்ட் 5,2009 இல் மலேசிய விசேட புலனாய்வுப் பகுதியினரால் கைது செய்யப்பட்டு ஸ்ரீலங்கா புலனாய்வினரிடம் கையளிக்கப்பட்டார் என்ற செய்தி சொல்லப்படுகிறது. அந்தக் கைதின் பின் அவர் அதே தினமே தாய்லாந்திலிருந்த பாங்கொங் விமான நிலையத்திலிருந்து, அவருக்காகப் பிரத்தியேகமாக அனுப்பப்பட்டிருந்த இராணுவத்தின் விமானத்தில் அதிகாலை கோட்டாபயவின் வீட்டுக்கு, அவரைச் சந்திக்கக் கொண்டு செல்லப்பட்டு, பின் மிகப் பாதுகாப்பாகப் பாதுகாப்புப் படையகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டார்.

மலேசிய பொலிஸார், தாங்கள் கே.பியை அவர் அறிவிக்கப்படாத ஓர் இரகசிய இடத்தில் இருந்து கொடுத்த ஒரு தொலைக்காட்சி பேட்டியிலிருந்து அடையாளம் கண்டு பின் தொடர்ந்ததாகவும், பின் ஓகஸ்ட்5 2009 இல் கைது செய்து கையளித்ததாகக் கூறுகிறார்கள். அவர் மலேசியாவில் இருந்த சில இந்து அமைப்புக்களுடன் தொடர்பிலிருந்தார் எனவும், அவர்களுக்கு வன்முறையில் ஈடுபட ஆயுதங்கள் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுத்தமையால் தங்களது கவனத்திற்கு அவர் வந்தார் எனவும் அறிவிப்புக்கள் வந்தன. இவை



அதிகாரபூர்வமின்றி சொல்லப்படுவன.

ஸ்ரீலங்காவோ அவரின் கைதுக்காக கோட்டாபயவுக்குப் புகழாரம் சூட்டுகிறார்கள். விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் ஆனந்தபுரம், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் கொல்லப்பட்டபோது அவர்களது தொலைபேசிகள் கைப்பற்றப்பட, அவை எல்லாம் ஆராய்வுக்காகக் கோட்டாவின் மேற்பார்வையில் கொடுக்கப்பட்டதாகவும், அதில் இருந்த ஒவ்வொரு அழைப்பையும் படித்து, கே.பியின் தொடர்பு எங்கெங்கு எடுக்கப்பட்டது எனக் கணித்து மலேசிய தூதரகத்துக்கு அவர் தகவல் தந்தாரென்றும் அதன் அடிப்படையில் கே.பியைக் கைது செய்ய மலேசிய அதிகாரிகளுடன் ஒழுங்கு நடந்ததாகவும் சொல்லப்பட்டது.

ஆனால் சட்ட ரீதியில் மலேசியாவில் – அதுவும் இந்து அமைப்புக்களுடன் வன்முறையைத் தூண்ட செயல்படுகிறார் என சந்தேகிக்கப்பட்டவர்,மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்று ஏன் கோரப்படவில்லை,சட்டத்தரணிகளை அழைக்க அனுமதிக்கப்படவில்லை என்பதும், அன்றே உடனடியாக தாய்லாந்துடன் எதுவித ஈடுபாடின்றி (அவர் தாய்லாந்தின் குடியிருப்பு பிரஜை) நேரடியாக பாங்கொங் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு உடனடியாக கொழும்பு சென்றார் என்பதும் கேள்விகளை எழுப்பி, அவை அவர் தானாகவே முன்னேற்பாட்டில் சென்றார் என்ற கருத்துக்கு ஆதரவு தருகின்றன.

அவர் நேரடியாக கோட்டா வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டதும், பின் எந்தச் சிறையிலும் வைக்கப் படாது, பாதுகாப்பு அலுவலகங்களில் வைத்து விசாரிக்கப்பட்டவையும், அவரது கைது, அவர் நடத்தப்படும் முறை, அவர் தரும் தகவல்கள் எவையும் கோட்டாவின் தனிப்பட்ட அனுமதி இல்லாது வெளிப்படுத்தப்படக் கூடாது என இடப்பட்ட கட்டளைகளும் இந்த சந்தேகங்களை மேலும் வலுக்கூட்டுகின்றன. அவரும் அவருக்கு ஆதரவாக இருக்கும் புலம் பெயரிலுள்ள விடுதலைப் புலிகளும் இவை எல்லாம் வதந்திகள் எனவும், ஆதாரமற்றவை என்றும் கூறி மறைக்கப்படுகின்றன. மறுக்கப்படுகின்றன. கே.பியும் மறுக்கிறார்.

மலேசிய அதிகாரிகள் தமது ஈடுபாட்டைப் பற்றி விவரங்கள் வெளியிடுவதில்லை. தாய்லாந்தோ கே.பி. அங்கு கொண்டுவரப்பட்டார் என்பது பற்றி வந்த செய்திகள் எல்லாவற்றையும் மறுத்தது. அவரது கைதில் முன்னர் இந்திய புலனாய்வுப் பகுதிகள் அக்கறை கொண்டிருந்தன. சர்வதேச பொலிஸாரால் அவர் வேண்டப்பட்டவர். ஆயின் கைதுக்குப் பின் ஒருவரும் அவரைத் தேடிச் செல்லவில்லை.

கே.பியோ தான் வன்முறையின் பலாபலன்களை அறிந்து மாறிவிட்டேன் எனவும், தமிழ் மக்கள் அரசியலும் அப்படியான திசையில், இணைந்த அடிப்படையில் உருவாக வேண்டும் எனப் பேட்டிகள் தருகிறார். வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வாழ்வாதாரம் தருகிறார். கட்டுப்பாடுள்ள சுதந்திரத்தை அனுபவிக்கிறார்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# கர்ப்பிணித் தாய்மாரே மிகவும் அவதானம்! சுகாதார அமைச்சு விடுத்துள்ள எச்சரிக்கை

கொவிட் வைரஸ் பரவலில் பாதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், இதுவரையில் 5 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான கர்ப்பிணித் தாய்மார் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமையுடன் அவர்களில் 41 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் மகப்பேற்று மற்றும் சிறுவர் நல பணிப்பாளர் வைத்தியர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்தார்.

நாட்டில் பரவிக்கொண்டுள்ள டெல்டா வைரஸ் பரவலில் கர்ப்பிணித் தாய்மார் பாதிக்கப்பட்டு வருகின்றர் என சுகாதார பணியகத்தின் தரவுகள் வெளிப்படுத்தியுள்ள நிலையில், அது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இப்போதுள்ள கொவிட் பரவலில் அதிகமான கர்ப்பிணித் தாய்மார் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டில் தாய் சேய் மரணத்துக்கு பிரதான காரணமாக கொவிட் வைரஸ் காணப்படுகின்றது.

குறிப்பாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் தாய் மரணங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன.

இலங்கையில் கொவிட் வைரஸ் பரவல் ஏற்பட்ட காலத்தில் இருந்து இந்த ஆண்டு ஏப்ரல் வரையில் எந்தவொரு கர்ப்பிணித் தாய் மரணமும் பதிவாகவில்லை.

எனினும் நாட்டில் டெல்டா வைரஸ் பரவல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தின் பின்னரே குறித்த 41 கர்ப்பிணித் தாய்மார்களின் மரணங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிலைமை தொடராது இருக்க கடினமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நாட்டின் இந்த நிலைமை தொடருமானால் சமூகத்திலும் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே வைரஸ் பரவலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொறுப்பு சகலருக்கும் உள்ளது. – என்றார்.

# தமிழ் இளைஞர் மற்றும் யுவதிகள் பொலிஸ், இராணுவத்தால் சித்திரவதை

தமிழ் இளைஞர், யுவதிகளை இலங்கை பொலிஸாரும் இராணுவமும் கடத்தி சித்திரவதை செய்து வருகின்றனர் என சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்திற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சர்வதேச விசாரணையாளர்கள் தற்போது இங்கிலாந்தில் உள்ள 15 தமிழர்களிடம் அறிக்கைகளைப் பதிவு செய்தனர் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2019 நவம்பரில் கோட்டாபாய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்கள் கடத்தப்பட்டு சட்டவிரோதமாகத் தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் அதிகமானோர் இந்த ஆண்டு நடைபெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்தில் பங்கேற்றவர்கள் என்றும் சிலர் இறந்தவர்களுக்கான நினைவேந்தல்கள் மற்றும் காணாமல் போனோருக்கான போராட்டங்களில் பங்கேற்றவர்கள் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாவில் இலங்கையை பற்றி விவாதிக்கும் போது பாதுகாப்பு படையினரின் தொடர்ச்சியான சித்திரவதைகள் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் முதன்மை பெறல் வேண்டும் என அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் .....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- வெகுஜனத் தொடர்புத் துறையில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி இவை ஒரு சாதாரண நபரிடம் ஏற்படுத்தும் தாக்கத்தின் வேறுபாடுகள் என்ன?

பதில்:- அதாவது மூன்று ஊடகங்களும் ஒரே விதமான தாக்கத்தைத்தான் ஏற்படுத்துகின்றன. ஆனால் வானொலியும் தொலைக்காட்சியும் மிக வேகமாக ஒரு நேயரைச் சென்றடைந்து விடுகின்றன.

கொழும்பிலே ஒரு சம்பவம் இன்று நடந்தால் அரை மணி அல்லது கால் மணி நேரத்தில் இலங்கை வானொலியும், ரூபவாஹினியும் அந்தச் செய்தியை மக்களுக்குக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் பத்திரிகையை நாங்கள் தயாரித்து வெளியிட்டு அதை நேயர்கள் படிப்பது மறுநாள் காலையாகவும் இருக்கலாம். ஆனால் பத்திரிகை ஏற்படுத்தும் தாக்கம் இருக்கிறதே அது நிரந்தரமானது. மற்ற இரண்டு ஊடகங்கள் மூலம் செய்திகள் சரியாகக் கிடைத்தாலும் அவை நேயர்களுடைய மனதிலே நிலைத்து நிற்பதில்லை. சற்று நேரத்தில் மறைந்து விடக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்துகின்றன.

ஆனால் பத்திரிகை ஏற்படுத்துகின்ற தாக்கமோ, அது அச்செழுத்துக்களில் இருப்பதால் ஒரு நிரந்தரப் பதிவை வாசகர்களுடைய மனதிலே ஏற்படுத்துகின்றது.

கேள்வி:- வானொலியும் தொலைக்காட்சியும் அப்படியான ஒரு நிரந்தரத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று சொல்ல முடியுமா?

பதில்:- நிரந்தரத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஒரு தடவை அவர்கள் கேட்கலாம் அல்லது ஒரு தடவை அவர்கள் பார்க்கலாம். திரும்பவும் அவர்களுக்குக் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆனால் பத்திரிகை மூலமோ திரும்பத் திரும்பப் படிக்கவும் முடிகிறது. அதனால் பத்திரிகை ஏற்படுத்துகின்ற தாக்கம் நிரந்தரமானது.

(வளரும்...)

# மனித உரிமைகள் பேரவைக்குக் கடிதம் அனுப்பியது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை கடந்த புதன்கிழமை அனுப்பிவைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 கீழ் 1 தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்றும் எனவே பொறுப்புக் கூறல் விடயம் பேரவையில் இருக்கும்வரை மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியும் அரசியல் தீர்வும் தாமதமாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே இந்த விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கடிதம் மூலம் கோரியுள்ளது.

கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று ஜெனிவாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு பங்காளிக்கட்சிகள் அடங்கலாக ஐந்து கட்சிகள் இணைந்து, மற்றுமொரு கடிதத்தை ஏற்கனவே அனுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமூகத்தில் அதிகரிக்கும் ......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தற்கொலைக்கான காரணிகள்

தற்கொலை எண்ணம் கொண்ட கணிசமான மக்கள் தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் இரகசியமாக வைத்திருப்பார்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான எந்த அடையாளத்தையும் காட்டுவதில்லை. ஒரு சூழ்நிலையைச் சமாளிக்க முடியாது என்று ஒரு நபர் உணரும்போது தற்கொலை எண்ணம் ஏற்படலாம். இது நிதி சிக்கல்கள், நேசிப்பவரின் மரணம், உறவின் முறிவு அல்லது பலவீனப்படுத்தும் நோய் அல்லது உடல்நிலை ஆகியவற்றால் கூட ஏற்படலாம். பொதுவான தற்கொலைக் காரணிகளாக பின்வருவன அமைகின்றது.

* குடும்ப வரலாறு
* குழந்தை துஷ்பிரயோகம், புறக்கணிப்பு அல்லது அதிர்ச்சி
* மனநலப் பிரச்சினைகள்
* நம்பிக்கையில்லா உணர்வு
* தற்கொலை செய்து கொண்ட ஒருவரை அறிதல், அடையாளப்படுத்துதல்
* பொறுப்பற்ற அல்லது மனவெழுச்சி நடத்தை
* தனிமை அல்லது தனிமை உணர்வு
* குடும்ப அல்லது வீட்டு ஆதரவு இன்மை.
* மனநலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அணுக முடியாமை
* வேலை, நண்பர்கள், நிதி அல்லது அன்புக்குரியவர் இழப்புகள்
* உடல் நோய் அல்லது உடல் நிலை
* பிரச்சினைகளுக்கு பயம் அல்லது வெட்கம் காரணமாக உதவியை நாடாமை
* குடும்பத்தின் மற்றும் சமூகத்தின் பாரபட்சம் மற்றும் பாரபட்சம் காரணமாக மனஅழுத்தம்
* சமூக மற்றும் கலாச்சார அழுத்தங்கள்
* முன்னர் தற்கொலைக்கு முயன்றவர்கள்.
* கொடுமைகளுக்கு உள்ளாதல் அல்லது அதிர்ச்சியை அனுபவித்தல்
* குற்ற மற்றும் சட்ட சிக்கல்கள் அல்லது தீர்க்க முடியாத கடன்கள்.
* மருந்துகள் அல்லது போதைக்கு அடிமையாக காணப்படல்.

## தற்கொலை தடுப்பு முறைகள்

* தொழில்முறை உதவியைப் பெறுதல். தற்கொலை செய்து கொள்ளும் நபருக்குத் தேவையான உதவியைப் பெற உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். ஆலோசனை மற்றும் பரிந்துரைகளுக்கு ஒரு மனநல நிபுணரை அணுகி சிகிச்சை வசதியைக் கண்டறியவும் அல்லது ஒரு மருத்துவரின் சந்திப்புக்கு அழைத்துச் செல்லவும் நபரை ஊக்குவிக்கவும்.

* சிகிச்சையைப் பின்தொடர்தல். மருத்துவர் மருந்துகளை பரிந்துரைத்தால் குறித்த நபர் அதைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதன் பக்கவிளைவுகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் மற்றும் அந்த நபர் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றினால் மருத்துவரிடம் தெரிவிக்கவும். ஒரு குறிப்பிட்ட நபருக்கு சரியான மருந்து அல்லது சிகிச்சையை கண்டுபிடிக்க நேரம் மற்றும் விடாமுயற்சி தேவை.

* உதவத் தயாராக இருங்கள். தற்கொலை செய்ய நினைப்பவர்கள் பெரும்பாலும் தங்களுக்குளவரும் உதவ முடியும் என்று நம்புவதில்லை, எனவே நீங்கள் உதவி வழங்குவதில் அதிக முனைப்புடன் இருக்க வேண்டும். 'உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் என்னை அழைக்கவும்' என்று சொல்வது பயனற்றது.

* நேர்மறையான வாழ்க்கை முறை மாற்றங்களை ஊக்குவித்தல் – ஆரோக்கியமான உணவு, தூக்கம் மற்றும் இயற்கைச்சூழலில் குறைந்தது 30 நிமிடங்கள் ஒவ்வொருநாளும் இருக்கச் செய்வது சிறந்தது. உடற்பயிற்சியும் மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது பயன்தரக்கூடிய இரசாயனங்களை வெளியிடுகிறது, மன அழுத்தத்தை நீக்குகிறது.

* பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குங்கள். ஒரு தற்கொலை நெருக்கடியின் போது அவர்கள் பின்பற்றுவதாக உறுதியளிக்கும் படிநிலைகளின் தொகுப்பை உருவாக்க உதவுங்கள். ஒரு தற்கொலை நெருக்கடிக்கு வழிவகுக்கும் எந்த தூண்டுதல்களையும் அது அடையாளம் காண வேண்டும்.

* தொடர்புகளைப் பேணுதல் - நபரின் மருத்துவர் அல்லது சிகிச்சையாளருக்கான தொடர்பு எண்களையும், அவசரகாலத்தில் உதவும் நண் பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களையும் அறிந்து வைத்திருக்கவும்.

* தற்கொலைக்கான சாத்தியமான வழிகளை அகற்றவும் - தேவையற்ற தீங்குதரக்கூடிய பொருள்களை குறித்த நபர்களின் சூழலிருந்து அகற்றுங்கள். அதிகமான மருந்தை உட்கொள்ள வாய்ப்பு இருந்தால், மருந்துகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள் அல்லது அந்த நபருக்குத் தேவைப்பட்டால் மட்டுமே கொடுக்கவும்.

* நீண்ட காலத்திற்கு உங்கள் ஆதரவைத் தொடருங்கள் – உடனடி தற்கொலை அழுத்தங்கள் கடந்த பிறகும், அந்த நபருடன் தொடர்பில் இருங்கள், அவ்வப்போது மறைமுகமாக அறிந்து கொண்டு குறித்தநபர் மீட்புப் பாதையில் இருப்பதை உறுதிப்படுத்த உங்கள் ஆதரவு இன்றியமையாதது.

உடலில் ஏற்படும் நோய்களுக்கு உடனடியாக தீர்வு வேண்டி மருத்துவரை அணுகக் கூடிய நாம், மன ரீதியான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. சமூகத்தில் உறவினர்கள், நண்பர்கள் மன அழுத்தத்தில் இருந்தால் அதை கண்டறிந்து அதற்கான தீர்வை எடுப்பது நம் கடமை. உலக அளவில் மன அழுத்தத்தால் 35 கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது. ஆரம்ப நிலையில் உள்ள பிரச்சினைகளுக்கு மனநல ஆலோசகரிடம் சென்றால் உளவளத் துணை மூலம் பிரச்சினையை தீர்க்கலாம். ஆனால் இப்படி ஒரு விடயம் இருப்பதே அதிகமான மக்களுக்கு தெரியாது என்பது மறுக்கமுடியாத உண்மை. தீவிரமாகியுள்ள உளப்பிரச்சினைகளுக்கு மருந்துகளுடன் கூடிய ஆலோசனை தேவைப்படலாம். நமது சமூகத்தில் இத்துறையில் நிபுணர்களை அதிகமாக உருவாக்க வேண்டும். அதிகமான தற்கொலைகள் குடும்பப் பிரச்சினைகள் காரணமாகத்தான் ஏற்படுகின்றன. கணவன், மனைவியிடையே பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை, ஒருவரை மற்றொருவர் புரிந்து கொள்ளாமை போன்றவையே முதற்காரணங்களாக நமது சமுதாயத்தில் இருக்கின்றன. குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்களுக்கு உளரீதியான ஆறுதலுடன் ஒத்துழைப்பை அளித்து அவர்கள் நம்பிக்கையுடன் உலகில் வாழ்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



# 24 கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

**- வே.வரதசுந்தரம் -**

**ஏற்றும் ஞானதீபம் எம்மடமை போக்கிடும்
ஏற்றம் பெறச்செய்யும் இகபர சுகமளிக்கும்
தேற்றும் திறலுடையாள் சிந்தாகுலம் அடைந்தவரை
தேனாய் அமிர்தம் சிந்தையுள் சொரிவாள்
நேற்றும் இன்றும் இனிமேலும் எவ்வுயிர்க்கும்
நேர்வழி காட்டும் கலங்கரை விளக்குமவள்
மேற்கதி அடைந்து மேலான இன்பம்பெற
மேன்மைபெறு அபிராமி திருவருளே துணை!**

திருகோணமலை மண்ணின் மங்கை, பல்லாண்டுகள் தியாக சிந்தையுடன் கல்விச்சேவை ஆற்றி மங்கையர் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்த ஓய்வு பெற்ற ஆசிரியை சங்கீத கலாவித்தகி செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு பாடிய இப்பாடல் கேட்டு அம்பாள் பக்தர்கள் மெய்சிலிர்த்துப் போவர். அடுத்து அம்பாள் அற்புதம் பார்ப்போம்.

தம்பலகாமம் கூட்டாம்புளி மண்ணின் மங்கை நித்தியலட்சுமி. ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர். அவர் கணவர் இரத்தினவடிவேல் இலங்கை போக்குவரத்து சபையின் ஓய்வுபெற்ற முகாமையாளர். சமூகசேவையாளர். அம்பாள் பக்தை நித்தியலட்சுமி. தானும், தன்குடும்பத்தாரும் அனுபவித்த காளி ஆச்சி அற்புதத்தை இனிய, தமிழ்நடையில் அம்பாளிடத்தே பயபக்தி ஏற்படும் வண்ணம் எடுத்துரைப்பது கேட்டின்புறுவோமாக:-

‘நெஞ்சத்துக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி என்பது ஐதீகம். அந்த வகையில் பக்தர்களின் ஆத்மார்த்தமான பிராத்தனைகளை ஏற்று அருள்பாலித்துக் கொண்டு வீற்றிருக்கும் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரைப் பூவாம் அன்னை பராசக்தி பத்திரகாளி அம்பாள் ஆலயமானது தஷ்ணகைலாயம் எனப் போற்றப்படும் திருமலை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

பங்குனி உத்திரத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு பத்து நாள்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் இரதோற்சவம் நடைபெற்று பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணமலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் தீர்த்தமாடுவாள். பக்தர்கள் இம்மகோற்சவ நாள்களில் ஏனைய விசேட தினங்களைவிட பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவது மிகமிக விசேடமாகவும் மேலோங்கியும் விளங்குகிறது என்னும் போது அம்பாளின் பெருமையே பெருமை.

சுமார் 10 வயதிலிருந்தே பத்திரகாளி அம்பாளின் பக்தையானவள் யான். எனது பாட்டி துளசி அம்மாளின் வழிநடத்தையில் அம்பாளின் ஆலயத்தில் நுழைந்தவள். 1972 ஆம் ஆண்டில் அம்பாளின் திருத்தேரின் வடத்தினைச் சிறுமியாக பக்தர்களுடன் இணைத்து இழுத்த அற்புதமான அனுபவம் என்னுள் இன்னமும் புத்துணர்வை மீட்டிக் கொண்டே இருக்கின்றது.

அன்னையவள் ஆலயத்தின் வெளிவீதியில் காலடி வைத்ததுமே யாவர்க்கும் மெய்சிலிர்க்கும். சிறுவயதிலேயே (7 வயதில்) சங்கீத பூஷணமான தந்தையை இழந்த நான் பாடசாலைப் பருவத்தில் திருமலை நகரத்திலிருந்து 20 மைல் தொலைவில் அமைந்துள்ள வயலும் வயல் சார்ந்த அழகிய கிராமமான தம்பலகாமத்தில் வசித்து வந்தோம். அச்சந்தர்ப்பத்திலும் திருகோண நாதரைத் தரிசித்து அம்பாளின் ஆலயத்திற்கு வருகை தருவதை வழக்கமாகவே கொண்டிருந்தோம்.

நாம் மட்டுமல்ல, திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களில் வசிக்கும் மக்களும், ஏன் இலங்கையின் ஏனைய மாவட்டத்தில் வசிக்கும் மக்கள், உலகளாவிய ரீதியில் வாழும் மக்கள் யாவரும் நேர்த்திகளை நினைந்து, ஆலயத்தினை அடைந்து அம்பாளை நெஞ்சுருகி வழிபடுகின்றனர். இவ்வாறான பெருமைகளைப் பிரதிபலித்து அற்புதங்கள் தரும் ஆலயங்கள் வரிசையில் ஒன்றாக எமது அம்பாளின் திருத்தலம் மிளிர்கின்றது என்றால் மிகையாகாது.



காளிஆச்சி பக்தை நித்தியலட்சுமி



அம்பாள் பக்தை மணிமேகலாதேவி

அத்துடன் ஆலயத்தில் நேர்த்தியினை முறைமையுடன் பூர்த்திசெய்தால் கீர்த்தி நிச்சயம் என்பது வெள்ளிடைமலை. ‘கோடிபுண்ணியம் கோபுரதரிசனம்’ என்பதற்கு இணங்க அம்பாளின் ஆலயத்தில் ஓங்கி உயர்த்து நிற்கும் கோபுரதரிசனமே எமது இடர்கள் அனைத்தையும் நீக்கி மனதினில் நிறைவினை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. காலகாலமாக பலவிதமான இயற்கை அனர்த்தங்கள், யுத்த இடர்கள், தொற்றுநோய்கள் போன்ற சம்பவங்கள் ஏற்பட்டாலும் கூட திருமலை நகரில் எமது மூதாதையர்களும், நாமும் தலையோடு போகவேண்டியது தலைப்பாகையுடன் போய்விட்டது போன்றதொரு அனுபவத்தினையே அம்பாளின் கிருபையினால் பெற்றிருக்கின்றோம்.

முழுமனதுடன் கூடிய ஆத்மார்த்தமான நேர்கடனிற்கு பத்திரகாளி அம்பாள் என்றுமே பக்தர்களைக் கைவிட்டதில்லை. ‘கடவுளை நம்பினோர் கைவிடப் படமாட்டார்கள்’ என்னும் முதுமொழிக்கு அம்பாளின் ஆலயம் ஒருசான்று எனலாம். அம்பாளின் சந்நிதியில் வழிபட்டால் நாம் சற்றும் கலங்கத் தேவையில்லை. பாடசாலைநாள்களில் நடைபெற்ற பரீட்சைகள், சொற்பொழிவு, நாடக, எழுத்துத்துறை போட்டிகளில் கலந்து கொள்ளும்போது சிறிதும் தளராமல் அம்பாளின் அருளை நாடியபோது பெறுபேறுகள் எனக்கு சாதகமாகவே அமைந்தன.

இலங்கையில் முதல் முறையாக நிகழ்த்தப்பட்ட அகில உலக இந்துமாநாட்டில் இந்து மதத்தின் தொன்மை என்னும் சொற்பொழிவுக்காக நான் தங்கப் பதக்கத்தினைப பெற்றுக் கொண்டமை அம்பாளின் அருளினால் என்பேன். எந்தன் தொழிற்துறையிலும் கூட அம்பாளின் கருணையினால் ‘மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை, என்பதற்கிணங்க பொருத்தமான உத்தியோகமும் அமைத்து எனது முப்பது வருட சேவைக்காலத்தில் ஆத்மார்த்தமான திருப்திகரமான சேவையினை பாரபட்சமின்றி, இன,மத வேறுபாடின்றி நிறைவேற்றிய திருப்தி அன்னையவளின் பொற்பாதங்களையே சாரும்.

மேலும் எனது இருகுழந்தைகளில் ஆண்குழந்தைக்கு 2 வயதில் ஏற்பட்ட ஆஸ்துமா நோய்கூட பத்திரகாளியைத் தஞ்சமடைந்தபோதுதான் நிவர்த்தியானது. இதற்கான நேர்கடனை எனது மகன் அவரது 7 ஆவது வயதில் அம்பாளின் உற்சவ தினத்தன்று அங்கப்பிரதட்ணையாக ஒப்புவித்தார். அதுமட்டுமன்றி இவ்வழிபாட்டினை இன்றுவரை அம்பாளின் அருளினால் உற்சவகாலங்களில் அவர் நிறைவேற்றி வருவது இன்றைய இளம் தலைமுறையினருக்கும் அம்பாளிடத்தே உள்ள நம்பிக்கையினை எடுத்துக் காட்டுகின்றது.

அது மட்டுமன்றி கணவரின் இருதய சத்திரசிகிச்சையின் போதுகூட அன்னையவளின் திருவருளினைச் சரணடைந்து மிகவும் சிரமமான நேர்கடனை அவள் பாத கமலங்களுக்குச் சமர்ப்பணம்செய்து அவளது அருளினால் நிறைவான பலனைப் பெற்றுள்ளோம். இன்னும் எத்தனையோ வேண்டுதல்கள் நிறைவேறியுள்ளன. எனது மகளின் திருமணம், முதுமையிலும் எனது தாயார் நலமாக வாழ்வது யாவுமே அம்பாளின் திருவருட்துணை அன்றோ!

குறிப்பாக இன்னுமொரு அனுபவத்தினையும் குறிப்பிட வேண்டுமென்று என்னுள்ளம் உணர்த்துகிறது. அம்பாளைத் தரிசிக்க ஆலயம் வந்திருந்தோம். மாலைநேர உற்சவத்தில் அம்பாள் வீதிவலம் வரும்போது திடீரென எனது சகோதரனின் கண் பார்வை மங்க ஆரம்பித்தது. நாம் அனைவருமே கலங்கிய வேளையில் அம்பாளின் மேல் நம்பிக்கை வைத்து மறுநாள் எனது கணவர் சகோதரனை கொழும்பிலுள்ள கண் வைத்தியரிடம் அழைத்துச் சென்று உரிய சிகிச்சையினை பெற்று மறுதினமே திருமலை வந்தடைந்தனர். இதில் ஆச்சரியம் என்னவெனில் அன்றைய தினமே தெளிவான கண்பார்வையுடன் எம்முடன் எமது சகோதரர் அம்பாளின் உற்சவத்தினில் கலந்துகொண்டமை. இது பத்திரகாளி அம்பாளின் அற்புதம் என்றே நாம் திடமாக நம்புகிறோம். இச்சந்தர்ப்பத்தில் அவளின் மீது நாம் வைக்கும் நேர்கடனின் பலாபலன் நமக்கு எப்போதும் உறுதுணையாகவே இருக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

தொடக்கமும் முடிவுமில்லாமல் என்றும் நித்தியமானவள் அன்னையவள். இன்று உலகத்தினையே கலங்க வைத்துக் கொண்டிருக்கும் கொரோனா நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்க அன்னையின் அருட்துணைதான் எமக்கு வேண்டும்.

பத்திரகாளி அம்பாளின் ஆலயத்தில் மேலும் ஒரு சிறப்பம்சமானது எந்தவொரு சங்கடமான காலகட்டத்திலும் கூட ஆலயத்தில் இடம்பெறும் நித்திய பூஜைகள், உற்சவங்கள், விரத அனுஷ்டானங்கள் எவையுமே தடைப்பட்டதாக சரித்திரமே இல்லை. அண்மையிலும் அம்பாள் ஆலயத்தினில் ஸ்ரீ வரலக்ஷ்மி விரத நோன்பு முன்னைய வருடங்களைப் போலில்லாவிட்டாலும் பக்தர்களின் ஆத்மார்த்தமான திருப்தியாக நிறை வேற்றப்படமை இந்துக்களாகிய எமக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கூற வேண்டும்.

அம்பாள் ஆலயத்தின் அமைப்பு, சூழல் யாவுமே எந்தவொரு மனிதனையுமே ஆன்மீக உணர்வின் பால் ஈர்க்குமென்பதில் சந்தேகமே இல்லை. அது மட்டுமன்றி ஆலயத்தின் முன்னால் பிரதமகுருவான பிரம்ம ஸ்ரீ சோமஸ்கந்தகுருக்கள் ஐயாவினதும், அவரைத் தொடர்ந்து அவர் புதல்வர் வேதாகமாமணி பிரம்மஸ்ரீ ரவிச்சந்திர குருக்கள் அவர்களின் சிறந்தவொரு முகாமைத்துவமும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மாண்பினுக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

உற்சவ, விசேட நாள்களில் பிரதமகுருவின் தலைமையில் அம்பாளிற்கு அலங்கரிக்கப்படும் அலங்காரங்கள் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன. தினம் தினம் வனப்புறும் எமது அலங்கார அன்னையின் கருணையினை எழுத்துக்களில் சுருக்கமுடியாது. வெள்ளம் போன்று ஊற்றெடுக்கும்.

எனது பெண்குழந்தை வளர்ந்தும் கூட, திருமணமாகி ஆஸ்திரேலியாவில் குடியேறிய பின்னும், இன்னமும் அவளது தலையணையின் கீழ் ஆசிரியர் வரதசுந்தரம் பாடிய ‘ஆச்சிநீ காளி’ எனும் நூல் உள்ளது.

திருமலையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் வாழும் இந்துமக்கள் யாவரும் நம்பிக்கையுடன் வணங்கும் பெண் தெய்வம் பத்திரகாளி அம்பாள்.

அன்னையின் மீது நம்பிக்கை வைத்தால் நமக்கு எப்போதுமே நற்பலங்கள்தான். எல்லோரும் இன்புற்றிருக்க இறைவியைப் பணிவோம்!’

# வடக்கு – கிழக்கு – தெற்கு என்ற பாகுபாடின்றி கோட்டா அரசால் அபிவிருத்தி முன்னெடுப்பு

## யாழில் வைத்து அமைச்சர் நாமல் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

**தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனை வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசால் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு - கிழக்கு - தெற்கு என்ற பாகுபாடின்றி அரசால் இந்த அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக நேற்று மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசானது வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பார்க்காது அனைத்து மக்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிக அளவிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக நீங்கள் ஒன்றை பார்த்துக் கொள்ள முடியும். தற்போது யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு புதிய கட்டடம் ஒன்று அமைக் கப்பட்டு வருகின்றது. அது மத்திய அரசின் பல மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அதுபோல பல்வேறுபட்ட குளங்கள், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. எனவே, தற்போதைய அரசானது வடக்கு - கிழக்கு - தெற்கு என்று பிரிவினையைப் பார்க்காது அனைத்துப் பிரதேசங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

எனினும், தற்போது எமக்குப் பிரச்சினை ஒன்று காணப்படுகின்றது. அது இந்தக் கொரோனா வைரஸ் என்ற பிரச்சினையே ஆகும். எனினும், இந்தக் கொரோனாவைரஸ்என்றதடையையும் தாண்டி அதனைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தோடு இந்த அபிவிருத்தியையும் இந்த அரசு தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு தற்போது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகின்றது. எனினும், தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இந்த அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித் துள்ளன. தற்போது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் பொலிஸார் தயாராக உள்ளார்கள். எந்தவொரு இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால், அந்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் உரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்வதன் மூலம் குறித்த வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பானவர்களைக் கைது செய்ய முடியும் - என்றார்.

### கூட்டமைப்பை உடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்துக்குச் சென்றிருந்தனர். இதன்போது வவுனியாவில் பொதுமக்களின் காணிகள் வனவள திணைக்களத்தினரால் எல்லைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சுமந்திரன் எம்.பி.,

வவுனியா மாவட்டத்திலுள்ள இத்திகுளம் பிரதேசத்திலே நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதனை ஓர் எல்லைப் பிரச்சினையாக மாற்ற முயற்சிப்பதாகத் தெரிகின்றது. வவுனியா எல்லைக்குள் இருந்ததை வவுனியா தெற்கு பிரிவுக்குள் இருப்பதாகக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற் காக நாங்கள் பிரதேச செயலாளரோடு பேசியிருக்கின்றோம்.

இவ்வாறானவிடயம்இனியும்தொடர்ந்து நடைபெறுமாக இருந்தால் நாங்கள் மேலிடத்தில் தெரியப்படுத்தவும், இது தொடர்பாக குரல் எழுப்புவதற்கும் முடிவெடுத்திருக்கின்றோம். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம் - என்றார்.

இதேவேளை, ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் குறித்து கருத்த வெளியிட்ட சுமந்திரன் எம்.பி. -

ஜெனிவாவுக்குத் தமிழரசுக் கட்சி எந்தவிதமான கடிதத்தையும் அனுப்பவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கையொப்பத்தில் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஒரு கட்சியே. அந்தக் கூட்டமைப்பாகத்தான் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். ஏனைய கட்சிகள் வேறாக செயற்பட்டு வருவது தொடர்பாக நாங்கள் அவர்களோடு பேசலாம். ஆனால், தமிழரசுக் கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து ஒருபோதும் தனியாகச் செயற்படவில்லை - என்றார்.

### யாழில் நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும், காரைநகரைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும், யாழ். வேம்படியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும், அரியாலையைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, தென்மராட்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மீசாலை மேற்கைச் சேர்ந்த 91 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 317 ஆக உயர்வடைந்துள்ளது.

### துரையப்பா விளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பாக கள ஆய்வை நேற்று மேற்கொண்டபோதே விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, யாழ் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணனிடம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆசிய நாடுகளின் சர்வதேச உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் சில போட்டிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

### 2, 856 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 77 ஆயிரத்து 636 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 18 ஆயிரத்து 147 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 8 ஆயிரத்து 116 ஆக உயர்வடைந்துள்ளது.

## தினசரி 200 ஒட்சிசன் சிலிண்டர்கள் வவுனியாவுக்குக் கட்டாயம் தேவை

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் முன்னர் நாள் ஒன்றுக்கு 75 ஒட்சிசன் சிலிண்டர் தேவைப்பட்ட போதும் தற்போது 200 சிலிண்டர்கள் வரையில் தேவைப்படுகின்றன என்று வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் தற்போது கொரோனா சிகிச்சை அளிக்கும் வசதி மாவட்ட வைத்தியசாலையில் மட்டுமே உள்ளது. இதனால் 3 விடுதிகள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன குறிப்பிடத்தக்கது.

### அத்தியாவசியமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீத உறுதிப்பாட்டிடையும், வெளிநாட்டு நாணய சந்தையின் திரவத்தன்மையையும் பாதுகாப்பதே இதன் நோக்கம் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் கீழ், கைப்பேசிகள், மின்விசிறிகள், தொலைக்காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், புடவைகள் மற்றும் உதிரிப்பாகங்கள், வளிசீராக்கல் இயந்திரம், சொக்லேட், ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு, மோல்ட், சீஸ் மற்றும் வெண்ணெய் போன்ற 623 பொருட்கள் அத்தியாவசியமற்ற அல்லது அவசரமற்ற பொருள்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

மேலும், இந்த புதிய நிபந்தனைகளின் கீழ் அவசரமற்ற மற்றும் அத்தியாவசியமற்ற இயற்கை பொருள்களின் இறக்குமதிக்கான கடன் வசதிகளை தடுக்க இலங்கை மத்திய வங்கி, அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கு நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த பட்டியலிடப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்காக 2019 இல் 1057.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 2020 இல் 871.2 மில்லியன் டொலர்களும் செலவிடப்பட்டுள்ளன.

இந்த வருடம் ஜூலை இறுதி வரை இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதிக்கு 753.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### விடுதலைப் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறாமல் இருக்க புலனாய்வுத்துறை பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசில் புலனாய்வுப் பிரிவை செயலிழக்கச் செய்ததன் காரணமாகவே சஹ்ரான் உட்பட இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியனர் என்றும் ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க பல்வேறு சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

இலங்கை சீனாவுடன் நெருங்கிச் செயற்படுவதால் சீனாவின் சர்வதேச எதிரிகள் இலங்கையை இலக்கு வைக்கின்றன.

நாட்டில் செயற்படும் சர்வதேச புலனாய்வுத்துறை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று இஸ்லாமிய தீவிரவாதத்தையும் அழிக்க வேண்டும்.

மதத் தலைவர்களைப் பயன்படுத்தி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை வைத்துக்கொண்டு நாட்டில் பல்வேறு பிரச்சினைகளையும் தூண்ட சிலர் முயற்சிக்கின்றனர் என்றும் அந்தக் கடிதத்தில் ஞானசார தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 30 லட்சத்து 90 ஆயிரம் ரூபா வைத்திய உபகரணங்கள் கேகாலை போதனா வைத்தியசாலைக்கு வழங்கிவைப்பு

## ஐக்கிய மக்கள் சக்தியின் ‘ஜன சுவய’ திட்டத்தின் கீழ்





‘ஜன சுவய’ கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்டத்தின் 25 ஆவது கட்டமாக 30 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் கேகாலை மாவட்ட போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் வை.எப்.சமரசிங்கவிடம் நேற்று(வியாழக்கிழமை) கையளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த மல்ரிப்பல் மொனிட்டர் உபகரணங்கள் 2, 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மற்றும் 12 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆப்டிஃப்ளோ நாசி சிகிச்சை உபகரணங்கள் இரண்டுமே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் ‘ஜன சுவய’ கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு “எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு’ நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இதற்கு முன்னர் 24 கட்டங்களில் 719 லட்சம் ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் குறித்த திட்டத்தின் கீழ் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் இந்திய உயர் தூதரகம் அறிவித்துள்ளது

2021-22 கல்வியாண்டில் ஆயுர்வேதம், யோகா,யுனானி,சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு/ பட்டப்பின்படிப்பு/ கலாநிதி ஆகிய கற்கைநெறிகளை தொடர்வதற்கு விரும்பும் இலங்கைப் பிரஜைகளுக்கு ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இந்திய உயர் தூதரகம் புலமைப்பரிசில்களை அறிவித்துள்ளது.

இலங்கை கல்வி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் திறமைவாய்ந்த இலங்கை பிரஜைகளைத் தெரிவு செய்து இந்திய அரசாங்கம் புலமைப்பரிசில்களை வழங்குகிறது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டங்கள் முழுமையான கற்கைநெறி கட்டணம் மற்றும் கற்கைநெறிக் காலம் முழுவதற்குமான மாதாந்த செலவின கொடுப்பனவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதுடன் தங்குமிட கொடுப்பனவு மற்றும் வருடாந்த உதவித்தொகையும் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ரு.சி. சி.ஆர். வழங்கும் சகல புலமைப்பரிசில்களுக் கும் சுகாதார நலன்புரிச் சேவைகள் முழுமையாகவழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை கல்வியமைச்சின் www.mohe.gov.lk. என்ற இணையதளத்தில் காணமுடியும்.

அத்துடன் வேறு தகவல்களை பெற்றுக் கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம் (E-mail-eduwing.colombomea.gov.in /0112421605, 0112422788 ext-605).

# 4 லட்சத்தைக் கடந்தது கொரோனா குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 18 ஆயிரத்து 147 பேர் குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 8 ஆயிரத்து 116 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை 4 லட்சத்து 74 ஆயிரத்து 780 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் கொரோனா வைரஸால் 10 ஆயிரத்து 689 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கை, கால் கட்டப்பட்டு நடு வீதியில் இளம் பெண்

அம்பாறை-தமன பிரதேசத்தில் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் இளம் பெண் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீன வத்த - கொங்கஸ் சந்தி பிரதேசத்தில் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண் ஒருவர் மீட்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த மாதம் 27 ஆம் திகதி குறித்த இளம்பெண் கடத்தப்பட்டார் எனப் பெண்ணின் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வென்னப்புவ -கதானகெதர பொலிஸாருக்கு தாய் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணையில் இந்தப் பெண் அடையாளம் காணப்பட்டுள்ளார். தற்போது அந்தப் பெண் அம்பாறை ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# தனிமைப்படுத்தல் மீறல் 637 பேர் கைதாகினர்

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 637 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் காலப்பகுதியில் 41 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இந்த நிலையில் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 67 ஆயிரத்து 979 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கொவிட் அச்சம்;

# தனியார் வைத்தியசாலைகளில் நிரம்பி வழியும் நோயாளர்கள்

வவுனியாவில் கொவிட் அச்சம் காரணமாக தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக அதிகமான மக்கள் நிரம்பி வழியும் சூழல் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் கொவிட் தொற்று பரவலடைந்துள்ள நிலையில் நாடாளாவிய ரீதியில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியா மாவட்டம்தழுவிய ரீதியில்தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதுடன், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து செல்கின்றது.

இந்நிலையில் நகரப்புறங்களில் அதிகமான பொதுமக்களுக்கு காய்ச்சல், தடிமன் போன்ற உபாதைகள் ஏற்பட்டு வருவதால் பொதுமக்கள் தனியார் வைத்தியசாலைகளிற்கு சென்று சிகிச்சைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்றால் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தில் தனியார் வைத்தியசாலைகளுக்கு சென்று தமக்கான சிகிச்சைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள மனைவிக்கு தொலைபேசி அழைப்பெடுத்த ரிஷாத்துக்கு சிக்கல்

வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மனைவியை, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தொடர்பு கொள்ள முயற்சித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த போது வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலைக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு ரிஷாத் உரையாடியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நிலையான தொலைபேசி ஒன்றிலிருந்து முற்பகல் 11.55 மணியளவில் அந்த அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் பதிவாகியுள்ளது.

அழைப்பை ஏற்படுத்திய ரிஷாத், வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் தனது மனைவியுடன் பேச வேண்டும் எனவும், தொலைபேசி பேசி ஊடாக மனைவியைத் தொடர்புபடுத்துமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் அந்த அழைப்பிற்குப் பதிலளித்த சிறைச்சாலை அதிகாரி அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார். அது சிறைச்சாலை சட்டத்துக்கு எதிரான செயல் என அவர் குறிப்பிட்டுள்ளார். ரிஷாத் அழைப்பை ஏற்படுத்திய இலக்கம் நாடாளுமன்ற இலக்கங்களின் ஒன்று என சிறைச்சாலை திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. விளக்கமறியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதினின் கையடக்க தொலைபேசி ஒன்று அண்மையில் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.